<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**</u>
<u>**எம்.சி.ஓ.பி.எண் 71/2021**</u>
<u>**நாள் 27/02/2025 வியாழக்கிழமை**</u>

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ராஜேஷ்குமார் மைனர் சாய்ராகவனுக்காக | த/பெயர் – வாசுதேவன் |
| வயது – 35 | தொழில் – |
| விலாசம் – எண் 3, பிரபு நகர், கும்மிடிப்பூண்டி | |

<u>முதல் விசாரணை–</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சா ஆ 1 முதல் ம.சா ஆ 13 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். ம.சா ஆ 5 ஆவணம் 2ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). முதல் தகவல் அறிக்கை மாற்ற அறிக்கை **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). விபத்து பதிவேட்டு நகல் (அரசு ஸ்டேன்லி மருத்துவமனை) **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). புறநோயாளி சீட்டு (எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை) **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). டிஸ்சார்ஸ் சம்மரி (அரசு ஸ்டேன்லி மருத்துவமனை) **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). சி.டி.ஸ்கேன் அறிக்கை 11.10.2019 **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). சி.டி.ஸ்கேன் அறிக்கை 17.10.2019 **ம.சா ஆ 7** ஆகவும்,

(8). மைனர் சாய்ராகவனின் பிறப்பு சான்றிதழ் நகல் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). மைனர் சாய்ராகவனின் ஆதார் அட்டை நகல் **ம.சா ஆ 9** ஆகவும்,

(10). விபத்து ஏற்ப்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ் **ம.சா ஆ 10** ஆகவும்,

(11). இன்சூரன்ஸ் **ம.சா ஆ 11** ஆகவும்,

(12). வரைபடம் **ம.சா ஆ 12** ஆகவும்,

(13). மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **ம.சா ஆ 13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த விபத்தை நேரில் பாா்க்கவில்லை. விபத்தின் போது எனது மாமியார் தான் எனது மகனுடன் இருந்தார். மேற்படி விபத்தால் எனது மாமியாருக்கும் காயம் ஏற்ப்பட்டது. எனது மாமியார் இழப்பீடு கோரி 61/2021 என்ற மனு தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் இருந்து வருகிறது. எனது மகனை எனது மாமியார் தான் தூக்கி வைத்திருந்தார். எனது மாமியார் எனது மகனை தூக்கிக்கொண்டு மண் ரோட்டில் நடந்து சென்றபோது பல்சர் இருசக்கர வாகனம் வேகமாக வந்து மோதி விபத்து ஏற்ப்படுதியதாக கேள்விபட்டேன். விபத்து குறித்து நான் தான் புகாா் கொடுத்தேன்.

மேற்படி பல்சர் வாகனத்தை வசந்த் த/பெ சிவா என்பவர் ஓட்டிவந்து விபத்து ஏற்ப்படுத்தியதாக போலிசார் கூறி தெரிந்துக்கொண்டேன். இந்த விபத்தானது போருந்து சிக்னலுக்காக நின்றுக்கொண்டு இருந்தபோது நடந்தது. மேற்படி விபத்து ஏற்ப்பட்ட சமயத்தில் மேற்படி வசந்த் என்பவருக்கு ஓட்டுநர் உாிமம் இல்லாததால் தண்டத்தொகை செலுத்தியுள்ள விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி விபத்தால் எனது மகனுக்கு தலையில் காயம் ஏற்ப்பட்டு அதனால் மூளையில் இரத்த கசிவு ஏற்ப்பட்டது. முதுகு மற்றும் கையில் காயம் ஏற்ப்பட்டது. தற்போது எனது மகன் 1ம் வகுப்பு படித்துவருகிறார். எனது மகனுக்கு அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம். அதன் பின்னர் இராமச்சந்திரா தனியார் மருத்துவமனையிலும், காஞ்சிபுரம் கே.ஜி.எஸ் கிளினிக் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றோம். ரூபாய் 5 லட்சம் நஷ்டஈடு கோரி மனு தாக்கல் செய்துள்ளோம். நான் எனது மகனுக்கு பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகபடியான நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது மாமியாரின் அஜாக்கிரதைதான் காரணம் என்றாலும் எனது மாமியார் எனது மகனை தூக்கிக்கொண்டு வாகனத்தை கவணிக்காமல் ரோட்டை கடந்தது தான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**